பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
06 07 2025 **SUNDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் உலகளாவிய நன்மைக்கு வலுவான சக்தியாக பிரிக்ஸ் அமைப்பு திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. கிராமப்புற வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சௌஹான் தெரிவித்துள்ளார்.

3. உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு பொதுமக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. அமெரிக்காவைச் சேர்ந்த தொழிலதிபர் திரு. எலான் மஸ்க் புதிய கட்சி ஒன்றை தொடங்குவதாக அறிவித்துள்ளார்.

5. ஆசியா பாரா வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<,

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் உலகளாவிய நன்மைக்கு வலுவான சக்தியாக பிரிக்ஸ் அமைப்பு திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரேஸிலின் ரியோடி ஜெனிரோ சென்றுள்ள அவர், மாநாட்டு அரங்கிற்கு வருகை தந்த பின் சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

இந்த உச்சி மாநாட்டை நடத்துவதற்காக பிரேஸில் அதிபருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<,

இதனிடையே, பிரிக்ஸ் அமைப்பின் புதிய வளர்ச்சி வங்கியில், கொலம்பியாவும், உஸ்பெகிஸ்தானும் இணைந்துள்ளன.

2015ஆம் ஆண்டு பிரிக்ஸ் அமைப்பின் சார்பில் உருவாக்கப்பட்ட இந்த வங்கி, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக நிதியுதவி வழங்கி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்தியா, பிரேஸில், ரஷ்யா, சீனா, தென்னாப்பிரிக்கா, பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட், எகிப்து, அல்ஜீரியா ஆகிய நாடுகள் இந்த வங்கியில் இடம்பெற்றுள்ளன.

ஷாங்காயை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் இந்த வங்கி, இதுவரை 120க்கும் மேற்பட்ட திட்டங்களுக்கு நிதியுதவி அளித்துள்ளது.

>>>>>><<<<<,

மருத்துவ கட்டமைப்பு வசதிகள் இதுவரை இல்லாத அளவிற்கு மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்தறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் ஆயுஷ்மான் பாரத் இயக்க பதிவு வாகனங்களின் சேவையை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்பதற்கு முன்னர் 7 எய்ம்ஸ் மருத்துவமனை மட்டுமே செயல்பட்டு வந்ததாக தெரிவித்தார்.

தற்போது இதன் எண்ணிக்கை 20ஆக அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இதே காலகட்டத்தில் மருத்துவ கல்லூரிகளின் எண்ணிக்கையும் 387லிருந்து 780ஆக அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மருத்துவ படிப்புகளுக்கான இடங்களின் எண்ணிக்கை, 51 ஆயிரத்து, ஒரு லட்சத்து 18ஆயிரமாக அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் கூடுதலாக 75 ஆயிரம் மருத்துவப் படிப்பு இடங்கள் உருவாக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<,

கிராமப்புற வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சௌஹான் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், சர்வதேச ஊரக வளர்ச்சி தினம் இன்று கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

முதன்முறையாக இன்று இந்த தினம் கொண்டாடப்படுவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

கிராமப்புற மேம்பாடே நாட்டின் வளர்ச்சியை உறுதி செய்யும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் கலாச்சாரம் மற்றும் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக கிராமங்கள் திகழ்கின்றன என்றும் திரு. சிவராஜ் சௌஹான் கூறியுள்ளார்.

**>>>>>><<<<<,**

உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு பொதுமக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று சென்னையில், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்று நூலை வெளியிட்டு அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் 60 செகண்ட்ஸ்)

**>>>>>><<<<<,**

நாட்டு நலனில் சமரசம் செய்து கொண்டு தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை இறுதிசெய்யும் பேச்சுக்கே இடமில்லை என்று தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

ஸ்ரீநகரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த ஒப்பந்தங்கள் பரஸ்பரம் பலனளிக்கும் வகையிலேயே இறுதி செய்யப்படுவதாக தெரிவித்தார்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஊக்கமளிக்கப்பட வேண்டும் என்பதே மத்திய அரசின் நிலைப்பாடு என்றும் அவர் கூறினார்.

உற்பத்திக்கான இந்தியா இயக்கம் என்பது உலகிற்கானது என்றும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

**>>>>>><<<<<,**

பெட்ரோலிய பொருட்களின் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அவர், கோவிட் பாதிப்பு காலத்தின்போதும், பெட்ரோல் மற்றும் டீசல் சீராக விநியோகிக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையுடன் கூடிய செயல்பாடுகளே இதற்கு காரணம் என்று அமைச்சர் தெரிவித்தார்.

**>>>>>><<<<<,**

சிறுபான்மையினர் நலனில் மத்திய அரசு அக்கறை கொண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

நாளிதழுக்கு அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், சிறுபான்மையினர் நலனுக்காக மத்திய அரசு நிறைவேற்றிய திட்டங்களை பட்டியலிட்டார்.

நாட்டின் வளர்ச்சியில் சிறுபான்மையினரின் பங்களிப்பை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

விரிவான ஆலோசனைகளுக்குப் பிறகே வக்ஃப் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதாகவும் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

**>>>>>><<<<<,**

பீகாரில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பு வாக்காளர் பட்டியில் திருத்தப் பணிகளை மேற்குவங்கத்திலும் மேற்கொள்ள வேண்டும் என்று அம்மாநில எதிர்க்கட்சித் தலைவர் திரு. **Suvendu Adhikari** கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பீகாரில் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வரும் பணிகள் வரவேற்கத்தக்கது என்றார்.

வெளிப்படைத் தன்மையுடன் தேர்தல் ஆணையம் இப்பணிகளை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

இதன் காரணமாக, மேற்குவங்கத்திலும் இப்பணிகளை மேற்கொள்ள வலியுறுத்துவதாக திரு. **Suvendu Adhikari** தெரிவித்தார்.

**>>>>>><<<<<,**

கைலாஷ் - மானசரோவர் யாத்திரையை முடித்துக் கொண்டு இரண்டாவது குழுவினர் இன்று கேங்டாக் திரும்பினர்.

47 யாத்ரிகர்களைக் கொண்ட இந்தக் குழு நாதுல்லா எல்லை வழியாக கடந்த மாதம் 25ஆம் தேதி இந்த யாத்திரையை தொடங்கியது.

இந்த யாத்திரை சுமுகமாக நடைபெற சிக்கிம் அரசு விரிவான ஏற்பாடுகளை செய்திருந்ததாக அக்குழுவினர் தெரிவித்தனர்.

**>>>>>><<<<<,**

அமெரிக்காவைச் சேர்ந்த தொழிலதிபர் திரு. எலான் மஸ்க் புதிய கட்சி ஒன்றை தொடங்குவதாக அறிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ள அவர், அமெரிக்க கட்சி என்று அதற்கு பெயர் சூட்டப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க மக்களின் சுதந்திரத்தை தமது கட்சி உறுதி செய்யும் என்றும் திரு. எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

**>>>>>><<<<<,**

மலேசியாவில் தீவிரவாத செயல்பாடுகள் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட தங்கள் நாட்டைச் சேர்ந்த 12க்கும் மேற்பட்டோர் குறித்த விசாரணையில் ஒத்துழைப்பு அளிக்க தயாராக உள்ளதாக பங்களாதேஷ் கூறியுள்ளது.

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று பங்களாதேஷ் அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

**>>>>>><<<<<,**

ஹிமாச்சலப் பிரதேசத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**Mandi, Kangra, Sirmaur** மாவட்டங்களில் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிம்லா, சோலன் உட்பட 9 மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு தேவையற்ற பயணங்களை தவிர்க்குமாறும் வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

ஜம்மு கஷ்மீரில் பெய்த கனமழை காரணமாக, தாழ்வான பகுதிகள் வெள்ள நீரால் சூழப்பட்டுள்ளன.

ஜம்மு - ஸ்ரீநகர் இடையே அமைக்கப்பட்டு வரும் சுரங்கப் பாதையிலும் வெள்ளநீர் சூழ்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>>><<<<<,**

ஆசியா பாரா வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

பெய்ஜிங்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவில் **Harvinder Singh** தங்கப்பதக்கத்தையும், மகளிர் பிரிவில் ஜோதி வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

**>>>>>><<<<<,**

உலக கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியா ஒரு தங்கம், மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

அஸ்தானாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 54 கிலோ எடைப்பிரிவில் சாக்ஷி தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் **Minakshi** -யும் 80 கிலோ எடைப்பிரிவில் பூஜா ராணியும், ஆடவர் 85 கிலோ எடைப்பிரிவில் **Jugnoo**-வும், வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

**>>>>>><<<<<,**

ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியல் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

அஸ்தானாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் மகாராஜன் தங்கப்பதக்கத்தையும், சுனில் சிங் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

**>>>>>><<<<<,**

உகாண்டா பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் ஸ்ரீகுமார், சஷாங்குமார் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<,

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெறும் நிலையில் உள்ளது.

பர்மிங்காமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கடைசி நாளான இன்று, 608 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிவரும் இங்கிலாந்து உணவு இடைவேளை வரை 6 விக்கெட் இழப்புக்கு 153 ரன் எடுத்துள்ளது.

>>>>>><<<<<,

அமெரிக்க **Smash** டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் மற்றும் மனவ் தாக்கர் ஆடவர் பிரிவிலும், மனிக்கா பத்ரா, அகுலா ஸ்ரீஜா, யசஸ்வினி கோர்படே மகளிர் பிரிவிலும் பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<,

2029 மற்றும் 2031ஆம் ஆண்டுகளில் நடைபெறவுள்ள உலக தடகள சாம்பியன் போட்டிகளை நடத்துவதற்கு உரிமை கோரவுள்ளதாக இந்தியா கூறியுள்ளது.

>>>>>><<<<<